**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
KODAVASAL

| | | |
|---|---|---|
| Case No. | : | **C.C. No.114/2025** |
| Deposition of witness | : | P.W.2 |
| Name | : | மாரிமுத்து |
| Father's /Husband Name | : | நடேசன் |
| Village | : | சித்தாடி |
| Taluk | : | குடவாசல் |
| Age | : | 63 |
| Occupation | : | விவசாயி |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 14th day of October 2025.
Accused produced from Judicial custody.

**முதல் விசாரணை:-**

நான் தற்போது குடவாசல் தாலுக்கா சித்தாடி அஞ்சாங்குளத் தெருவில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். எனக்கு சொந்தமான விவசாய நிலங்கள் சித்தாடி அஞ்சான்குளத்தில் இருக்கிறது. எனது வயலுக்கு பக்கத்தில் செல்வராஜ் என்பவருக்கு விவசாய நிலங்கள் உள்ளது. அதற்கு அருகிலேயே சையது பாரூக் என்பவருக்கும் விவசாய நிலங்கள் உள்ளது. அந்த நிலங்களில் விவசாயம் செய்வதற்கு செல்வராஜ்ம் சையது பாரூக்கும் மின்மோட்டார்கள் மூலமாக பாசனம் செய்து விவசாயம் செய்து வருகிறார்கள். கடந்த 19.09.2024 ம் தேதி மதியம் 02.00 மணியளவில் நான் எனது வயல் உள்ள அஞ்சான்குளத்திற்கு சென்றிருந்தேன். அப்போது ஆஜர் எதிரி, எனது பக்கத்து வயல்காரர் செல்வராஜ் என்பவரது வயலில் உள்ள மின்சார மோட்டார் செட்டிலிருந்து கைலியை மடித்து கொண்டு கைலிக்குள் காப்பர் ஒயரை மறைத்து வைத்துக்கொண்டு வந்தார். அதன்பிறகு செல்வராஜ் மதியம் 04.00 மணியளவில் மோட்டாரை போடுவதற்காக வந்துள்ளார். மோட்டாரை போட்டுள்ளார் மோட்டார் இயங்கவில்லை என்பதால் அதுபற்றி பார்த்ததாகவும் தனது மின்மோட்டாரில் இருந்த ஒயரை காணவில்லை என்றும், என்னிடம் கூறினார்.

அப்போது நான் செல்வராஜிடம் செட்டிக்குளத்தை சேர்ந்த சுரேஷ் மச்சான் செந்தில்குமார் என்பவர்தான் மதியம் சுமார் 02.00 மணியளவில் அவரது வயல் பக்கத்தில் இருந்து மோட்டார் ஒயரை கைலியில் மறைத்து எடுத்து சென்றார் என்று கூறினேன். மேலும் அதே பகுதியில் சையது பாரூக் என்பவரது மின்மோட்டாருக்கான ஒயரும் திருடு போய்விட்டது. இது சம்மந்தமாக செல்வராஜ் குடவாசல் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். அவர் கொடுத்த புகாரில் என்னை சாட்சியாக விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை-** இல்லை.

**மறுவிசாரணை** - இல்லை.

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2025.10.14 10:21:43 +0530

District Munsif -Cum-
Judicial Magistrate,
Kodavasal.

`